
30-2

# The Lost Sheep

## காணாமல் போன ஆடு

## லூக்கா 15 : 3–7

இயேசு அடிக்கடி தினந்தோறும் அவரைக்குறித்து மிக முக்கியமான சத்தியத்தையும், அவர் எவ்வாறு நம்மை பராமரித்து பாதுகாக்கிறவராய் இருக்கிறார் என்பதையும் போதிப்பதற்கு கதைகளைச் சொன்னார். இயேசுவினுடைய சத்ருக்கள் எப்போதும் அவரிடத்தில் தப்பு கண்டுபிடித்தார்கள் ஏனென்றால், அவர் தம்மிடத்தில் பாவிகளை சேர்த்துக் கொண்டு அடிக்கடி அவர்களுடன் கலந்து சாப்பிடுகிறவராயிருந்தார். எவ்வளவு அதிகமாய் அவர் எல்லா பாவிகளிடத்திலும் அன்புள்ளவராய், அவர்களை தம்மிடத்தில் அழைக்கிறவராய் இருக்கிறார் என்பதை காட்டுவதற்காக இங்கே அவர் ஒரு கதையை நேர்த்தியாய்ச் சொன்னார். ஒரு மனிதனுக்கு நூறு ஆடுகள் இருந்தன. அவைகளில் ஒன்று சாலைக்கு வெகுதூரத்தில் தன்னந்தனியாய் காணாமல் போய்விட்டது. தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்திரத்திலே விட்டுவிட்டு காணாமற்போன ஒரு ஆட்டை கண்டுபிடிக்க போனான். கண்டுபிடித்த பின்பு வீட்டுக்கு வந்து சிநேகிதரையும், அயலகத்தாரையும் கூட வரவழைத்து "காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன். என்னோடே கூட சந்தோஷப்படுங்கள் என்றான். மனந்திரும்பும் ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். காணாமற்போன ஆடு திரும்ப அவைகளோடு இருப்பதின் நிமித்தம் மற்ற ஆடுகளுக்கும் சந்தோஷம் இருக்கும் என்று உங்களுக்கு நிச்சயம் தெரியும்.

## ஜெபம்

ஒரு காணாமல் போன, இழந்த போன என்னை இயேசு இரட்சித்தார், அவர் என்றும் எப்பொழுதும் என்னை அவருடைய மந்தையில் வைத்து காக்கும் படி நான் ஜெபிக்கறேன். ஆமென்.

## வளர்ந்த பிள்ளைகளுக்குரிய வேதமாக மனப்பாட வசனம்

## லூக்கா 19 : 10

"இழந்து போனதை தேடவும் இரட்சிக்கமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்."